சேர்த்துமணந்திடுதல்வயித்தியமதனாற்சீவனந்தன்மனைவிவிற்றல்
வாய்த்தவிறசதற்காசமரங்களைவெட்டிடறன்னைவருந்தவிற்றல். (௪௯௮)

வேதத்தையக்கினியைப்பிள்ளையைக்கைவிடுதல்விடற்குசிதமான
நீதைச்சொனூல்களைக்கற்றிடன்மாதர்களைத்துக்கஞ்செய்தல்வேள்விக்

கோதிற்றனுசிதமல்லார்களையாகமுனூற்றுவித்தநவமயனிற்கக்
காதற்றம்பியர்வேள்விசெய்திடற்றனியந்தன்னைக்கருதிவிற்றல். (௧௬௯)

இந்தவுபபாதகம்போக்கிடுவோர்பராகந்தானன்றி
யந்தமுறவோர்சாந்திராயணந்தானன்றியகோரத்தைப்
புந்தியுறவேயோரிலக்கம்புகல்கவரசர்கொலைதன்னின்
மூந்துமறையோர்க்குரைத்ததனிலொருகாற்கூறுமுடிக்கவாம். (௧௭௦)

பாதகம்,

வசியர்கொலையினெட்டிலொன்றுவகுத்தச்செட்சூத்திரருக்
கிசையப்பதினாறதனிலொன்றையியற்றியிடுதலியல்பாகும
பசையற்றென்பிலுயிரைவதைத்தன்னிலாறிந்துசதஞ்சாத
மிசையப்புகல்கவறியாதங்கதனிற்பாதியம்பியிட்டே. (௧௭௧)

பூக்களவையினன்னத்திற்பொருந்துகிடைமத்தியந்த
சூக்கதரமானவைசொலையிற்சிலவனைக்கச்சுத்தியுறும்
பாக்கனுகுவதையினொருநூறுபசர்கநாய்கோழி
தாக்குகுரங்குநரிவதையினிருநூறுரைக்கதாழ்வறவே. (௧௭௨)

அன்னமாதிபறவைகட்குமாளியாதிமிருகம்ச
முன்னிவதைத்தாலகோரமொருநானூறுரைக்கவறியாது
மன்னுபசுவைக்குழந்தைதனைவதைக்கினிலக்கம்வழங்கிடுக
சொன்னகாமத்தாற்கருப்பவதையிற்சொல்கமூவயுதம். (௧௭௩)

மனற்யோனூறுப்பொன்றினைக்குறைக்கினகோரமிலக்கம்வழங்கிடுக
கறையார்ஞாளிகடிக்கினொருநூற்றெட்டுரைகாயத்திரியைக்
குறைசேர்நரிசெந்நாய்கடிக்கிற்கூறியிடுகவவ்வளவே
பொறைசேரெலிபூனைகள்கடிக்கினொருநூறுரைக்கபொற்புறவே. (௧௭௪)

படமாரரவுகாமத்திற்பரிசாதியினிற்கடித்திட்டாற்
றிடமாயயுதஞ்செப்புகமற்றகாமமெனிலாயிரமுரைக்க
விடமாருததிமகரமீன்கடித்தாலோர்கால்விளம்பிடுக
தடமார்காயத்திரியதனைப்பாவமறுக்குந்தாபதரே. (௧௭௫)

வேறு

இந்திரசாலவித்தைவைத்தியமிவைகள்செய்யின்
வந்துறுபிசாசுபூதமோட்டிடின்வல்விடத்தை
முந்துறத்தீர்க்கிற்காயத்திரியினைமொழிகமுன்னிச்
சிந்துறவினைசனூறுநூறுமிங்கிவைதெரிந்தே. (௧௭௬)

மாரணஞ்செய்தலென்றும்வழக்கன்றுச்சாடனாதி
சீருறச்செய்தானாயினகோரமோரயுதஞ்செப்ப
வேர்பெறுமனதுவாக்குக்காயத்தாற்பிறருக்கின்னா
நாரறச்செய்யின்மூலநூறுருநவிற்றநன்றே. (௧௭௭)

சாபத்தான்மனத்தன்வாக்காற்சத்தியஞ்செய்தக்கானுந்
தீயைப்போல்வாக்கினாலன்னியரைத்தூடணஞ்செய்தானு

நேயத்தானுரைக்கநூறிட்டருக்கெனிலிரண்டுநூறு
மாயத்தானுரைக்கபாவமாசறமதியாவமிக்கோர். (கஎஅ)

மானதவியாபாரந்தானொன்றுமற்றையவாக்கிற்குந்
தானொருநாள்காயேனைத்தனுவிற்குமொருநாள்காரு
மானதம்பரதாரேச்சைவரும்பரதனத்திலிச்சை
யேனையர்க்கநிட்டனுசிந்திததிடலகாரியத்தினாக்கம். (கஎகூ)

வேறு.

சினத்தைமீதுமாதவர்செய்யுமாயாமந்
தனைச்செய்தேயொருகாயத்திரிதன்னை
நினைத்துநாவினாலுரைத்திடநீணிலமதனின்
மனத்தினால்வருநால்வகைக்கரிசுமாய்ந்திடுமே (கஅ0)

வாக்கினால்விதமசத்தியங்கோளபவாதம்
போக்கிடத்தகுமிணங்குருப்புன்மொழிபிதற்ற
னீக்கவேண்டினிக்கரிசுநீர்மூத்தினமவுன
நோக்குமர்ச்சனையக்கினிசெபத்தினானூறும் (கஅக)

வேறு,

காயத்தானுன்கருந்தத்தகாதவுண்ணல்பரதாரங்கலந்துசேர்த
னேயத்தாற்பரதனங்கள்கவர்ந்திடலிங்கிஞ்சையிவைகணீக்கவேண்டிற்
றூயத்தேமுழுகிமுக்காலமுமூன்றுதினமவுனம்பசித்துச்சொல்க
தீயைச்சேர்மெழுகெனவிவ்வினையோடும்பிரயமொருநூறுதேர்ந்தே (கஅஉ)

துயிலுமிடத்தறியாதுசுக்கிலம்வீழ்ந்திடிற்சசேலநானம்பண்ணிப்
பயிலுகவத்திரநூறுபகல்வீழினிருநூறுபகர்கபாங்காற்
குயிலனையமொழியாரைப்பகற்கூடிற்பிரணவமாயாமங்கூடி
மயலறவோரிலக்கமுரைத்திடுகவந்தவினையனைத்துமாயுமன்றே. (கஅ௩)

ஸதிரீ பரிக்கிரகணம்.

பந்தமெனவனைத்தினையுந்துறந்தவிரத்தியர்புணர்ச்சிபழகலாகா
வந்ததெனில்விருப்பாசான்றனக்குரைத்தவ்விரதத்தைமாற்றிநீயக்
கொந்துசெறிகுழலாளைக்கூடெனக்கூடுகவன்றிக்கூடின்வீழ்ந்து
நைந்துறுவர்நரகினண்ணிநீற்றளவுமயிரளவுகாலநாடி. (கஅச)

இரவுதனிற்சுக்கிலத்தைவலியவிடின்வாமமிருநூறுசொல்க
பரவிடுகபகலாயினிருகுணிதம்பகலுறங்கினொருநூறோர்க
குரவநறுங்குழலாளைமோகத்தாற்கூடியிடினொருகாற்பின்பு
வரமுறவங்கவன்றனக்குப்பயமுறிலாயிரமுரைத்தல்வழக்கதாமே. (கஅரு)

பசுவாதியோனிகளைப்புணரினயுதம்வாமம்பகர்கவன்றிப்
பசுவோடுவிடைகூடும்பொழுதறியாதேபார்க்கினுரைக்கநூறு
மூசியாதுமைதுனவார்த்தையைக்கேட்கினிருதயத்தைமொழிகநூறு
தெசியாதமூக்குதடில்லாட்சேரிற்செப்புகவாயிரந்தான்வாமம். (கஅகூ)

இந்துமதிமுழுகினவடனையணைகலைந்துதினமிசபார்த்துங்
கருதுகதியருள்புதல்வன்காரணமாவன்றிமிகுகாமத்தாலே
புரிவோடுமெப்பாற்கூடிற்கர்த்தபத்தோடொக்குமெனப்புகலுநூல்கள்
சரிசடையாரரசர்முதலானோர்கள்கூடியிடிற்காமத்தாலே. (௪௮௭)

வாக்குமனக்காயத்தாற்பரதாரவாஞ்சையொருகாலுமாகா
தாக்குறமோகத்தாலோர்காற்கூடினைந்தயுதம்வாமஞ்சாற்ற
நீக்குறுமட்டமிபர்வசந்தியினிற்பகற்புணர்ச்சிநிகழிற்பாவ
நோக்கியுரையயுதமிரவெனிலதற்குப்பாதியினைநுவல்சமாதோ. (௪௮௮)

புலைச்சியகாமத்தாலேபுகின்வீட்டின்மண்பாண்டம்போக்கிநீரா
ணலத்ததிருமெழுக்காலுஞ்சுத்திசெய்துபுருடமையாயிர[illegible]வின்று
வலத்தகிருச்சிரம்புரிகவவள்புசிக்கினங்கிருந்துவாமமோர்ந்து
துலக்கமுறவோரயுதஞ்சொல்ககிருச்சிரஞ்சிவகெவ்வியமுங்கொள்ளே. ()

அறிந்தவளைக்கூடினதிகிருச்சிரஞ்செய்தறைவாமமயுதந்திரு
மறிந்துமனேகங்காலங்கூடினனேலப்படியேநீசனவன் [ட]
செறிந்தவண்ணாத்தியர்தோல்வாணிச்சியர்கண்மனைபுகுந்துதீண்டிற்பாண
மெறிந்துதினமொருமூன்றுபசித்தையாயிரம்வாமமியம்பரன்றே. (௪௯0)

வேறு.

கருப்பின்கட்டிநெய்வெண்ணெய்வாங்கினுடனேகருதிடுக
விரும்பிவாமமீராறுவிரைபாறயிர்தோல்வெண்பட்டு
திருந்துபுடைவைபருத்திதானியங்கம்பளந்தேனுப்பிவைகள்
யொருந்தவாங்கினொருமுந்நூறகோரமுரைக்கப்பொற்பாமே. (௪௯௧)

வேறு

அரிதாலமுதலானதாதுக்கள்சனகமுதலானலோகந்
திருவாரும்வயிரமுதன்மணிகுதிரையானைநிலஞ்சிறந்தபெற்றம்
விரிவாருந்தானியராசிகள்யானமடிமையிவைவிரும்பிவாங்கப்
பெரிதாகவியத்தினஞ்செய்தாலயத்தின்வாக்கிடினோரயுதம்பேசே. (௪௯௨)

விறகுதிருணாதிசல்லுவாங்கியிடினொருநூறுவிளம்டனீதி
யறவுமிகுபயிரோடுகூடுநிலம்வாங்கியிடினாயிரத்தையாய்க
பிறைமௌலியீசானங்கபடத்தால்வித்தையபகரித்தபேதை
குறைவறவேதற்புருடமாயிரமுச்சரிக்கவினைகுன்றுந்தானே. (௪௯௩)

வேறு.

தனக்குவிதித்தவினைவிட்டன்னியர்செய்தொழிலிற்சார்ந்தானேன்
மனத்தினறிகபதிதனெனவருந்தித்திரும்பினோர்மாதஞ்
சினத்தவிடையோனாலயத்திற்செபித்தேயொழியாதாகுதியு
நினைத்துப்புரிகவோரயுதஞ்சுசியுற்றிடுவனெறியாலே. (௪௯௪)

முச்சந்தியினைநாற்சந்தித்தனையுங்கடக்கின்முன்னிக
விச்சையுடனேயகோரமொருபஃதையாவமிகவியற்றி
னச்சமறத்தன்மனத்தினுக்குச்சுசியெவ்வளவவ்வளவுந்தா
னச்சியுரைக்கவெருளும்பாவமனைத்துநாடாவே. (௧௯௫)

பரமசிவனுலநள்சிவசாத்திரசிந்தனைநாடொறும்பண்ணிற்
சிரமாயிரவுருகற்செய்தபாவமனைத்துஞ்செந்தீமுன்
னிவவார்பஞ்சுங்கதிரோன்முன்னிருளும்போல்மாய்ந்திடுத
திரமாமெனவாகமநூல்கள்செப்பும்புவியிற்சிறப்புறவே. (௧௯௬)

பூப்பு.

பூக்கநாண்முதன்மூன்றுநாளளவும்பூவையர்க்குப்பூசையாசா
வாய்த்தமுதனாணீசமற்றையிருநாட்பிரமக்கொலையாட்கொப்ப
ணீத்திடுமூன்றுநாள்வண்ணாத்தினைநீர்ப்பளிம்மூன்றயநாளின்
மூர்த்திதனைட்பூசைமுடித்திடுகவலதுதியானந்தான்முன்னல். (௧௯௭)

நாலாநாளுடன்முழுதுமண்பூசிப்புனலாடிநல்லவாணின்
பாலாதியைந்தையுமுட்கொண்டமலன்பூசையினைப்பரிவாற்செய்க
சேலாரும்விழியார்செவ்வியங்கூடாதேலொருநூறகோரஞ்செப்பி
மேலாகுஞ்சிவபூசைபண்ணலாமெனமறைகள்விளம்புமன்றே. (௧௯௮)

பூப்புவரினிசியினந்நிசியைமுக்கூறாக்கிமுதற்பொருந்திச்சேர்ந்த
காப்புடையவிருகூற்றின்வரினந்நாண்முதலாகக்கணிக்கலாகு
மேற்புடையபிற்கூற்றின்வரின்மறுநாண்முதலாகவெண்ணலாகும்
வாய்ப்புறவந்தாலுமறிந்திலளாயினறியுங்காற்றொடமாற்றே. (௧௯௯)

சூதகிசண்டாளிபிணந்தொட்டவன்பிணஞ்சுட்டோன்றூரமாசுத
யேதமுறத்தொட்டோன்றன்சுற்றமிறக்கக்கேட்டோனிவர்கணீரிற்
றீதகலமூழ்காரேற்சாந்திராயணவிரதஞ்செய்கமாந்திக்
கோதறமூழ்கினராயிற்பிராசாபத்தியம்புரிகைகுணமதாமே. (௨00)

நாய்கழுதைநரிபதிதர்கொடிபறவைசண்டாளர்தீண்டினுடித்
தூயபுனன்மூழ்காதேயயின்றோர்கள்கிருச்சிரத்தைத்துணிந்துசெய்க
வாயபொழுதிற்பூத்தோர்க்குளந்தணன்றன்மனையாள்சூத்திரிச்சியாயி
னேயவரசியுந்தீண்டினென்றுமுக்கால்பாதிகிருச்சிரமியற்றே. (௨0௧)

சூத்திரிச்சிமுதலாயமூவர்களுமந்தணியைத்தொட்டாலந்த
மாத்திரையேமுறையாற்றனமும்பாதிகிருச்சிரமும்பாதியோடு
சீர்த்தவுபவாசமுமம்மூவர்களுமவமுவாதுமுறையிற்செய்க
சீர்த்தவரசியும்வணிகிசூத்திரிச்சியாற்றீண்டப்படினுஞ்சென்றே, (௨0௨)

கிருச்சிரங்காலரைமுறையிற்புரிகவரமாம்வணிகன்கேடின்மாது
முரைத்திடுசூத்திரிச்சியரசன்மனையாற்றொட்டப்படினுமோம்பிக்காற்கூ
றருத்தியுடன்கிருச்சிரத்தையாற்றிடுகசூத்திரிச்சிமூவராலுந்
திருத்தமுறத்தொடப்படிற்றானங்கொடுக்கசுத்தியுறுந்திடமதாயே. (௨0௩)

பூப்புற்றுளருந்துங்கானரிமுதலதீண்டினவள்புனலிஞனம்
வாய்ப்புறச்செய்ததன்பின்சாந்திராயணத்தைப்புரிந்திடுதன்மரபம்மாது
காப்புறவங்கயிலுங்கான்மயிர்வினைஞன்றொடின்மூன்றுதினங்காறுண்டி
யேற்புறநீக்கிப்பிரமகூர்ச்சமுட்கொண்டிடவசுசியேகுமன்றே. (உ0௪)

பின்னுமவளருந்துங்காலந்தியசன்றனைக்காணிற்பெருகியோடு
மன்னுபுனலொடுமளவும்முபவாசம்புரிகமாந்திறளே
லன்னமனையாள்புரிகசாந்திராயணமொருகோத்திரத்துள்ளார்க
ளென்னிலிருவருந்தொடினவ்விருமூன்றுபவாசந்தொடங்கநன்றே. (உ0௫)

ஒருவருணத்தோர்களொருவருக்கொருவர்தொடினொருநாளுபவாசத்தோ
ரெரியபுனன்மூழ்கவொருவருக்கொருவர்பேசினருந்திடுங்காற்காணின்
வருபுனன்மூழ்குறுங்காலமளவுமுபவாசந்தான்மருவியானின்
பொருவறுசெவ்வியமருந்தப்புனிதமுறுமெனமறைகள்புகலுமன்றே. ( )

செனனமரணசௌசந்தனிர்பூப்பினெடுத்துவந்தசெலத்தின்மூழ்கி
வினபமுறவருந்துகமூழ்காதருந்தினலாநாடனக்குமேலோர்
தினமுபவாசஞ்செய்கமிச்சிலொடுகூதகியாசௌசிதீண்டிற்
புனிதமுறக்கிருச்சிரமொன்றியற்றுகநைமித்திகபுண்ணியகாலத்தில். ()

எடுத்தபுனலான்மூழ்கியப்புடைவைகசக்காதேயுடுக்கவேனை
மடித்துகிலையுடுத்திடிற்புண்ணியகன்மம்புரிதல்வரம்பூத்தமாத
ரடுத்திடுநாலாநாண்மூழ்கிடினுதயந்தனக்குமேலாறுகன்னல்
விடுத்துமுழுகிடுகவுவர்முதலானகொடுதூசுவிமலமாக்கே. (உ0அ)

அருந்தினவெண்கலமூன்றுதரமேழுதரந்தானப்பளாவிவெள்ளை
திருந்தவிட்டங்கனலிடத்துக்காட்டவரஞ்சயனுதிசிறந்தநீராற்
பொருந்தியவைகழுவுகவங்கவள்படுத்ததலமெழுகப்புனிதமாகு
மிருந்திடுமங்கவளிரண்டுவிற்கிடைக்குட்டொடிற்றீட்டப்புறமின்றென்னை

வில்லிரண்டுக்குள்ளாயுங்கூட்டியகாட்டந்திருணமறைக்கின்மேவித்
தொல்லுலகிற்றீட்டின்றுங்கன்மநடுவவட்காணிற்சொல்வித்தார
நல்லபிராணாயாமம்பண்ணியிரவியைப்பார்க்கநன்மையாகுஞ்
சொல்லிடுமங்கவட்கொருபன்னிரண்டாநாளளவுகறைபடினுஞ்சொல்வாம்

மூத்திரம்விட்டாற்சௌசமெப்படியப்படிப்புரிகமூவாறுகும்
வாய்த்திடுநாளளவாகவந்துபடிற்புனன்மூழ்கவரமதாகுங்
கூர்த்தவிதற்கப்பால்வந்திடின்மூன்றுநாள்விலக்கங்குறித்துநான்கென் [றும்
றேத்திடுநாட்புனன்மூழ்கிக்செவ்வியந்தானெய்தான்கொண்டிடுகவென்

சூதகம்

உதிப்பதற்குமுனம்பிறக்கினிறக்கின்முனைநாளாகக்கூட்டியோர்க
மதித்திடுநல்லான்கருமேதிகளீன்றநாண்முதற்பத்தாநாண்மட்டும்
விதித்திடுசூதகமாகும்வியன்கருப்பமுயிர்த்தவள்சொற்கேட்டல்பார்த்த
லிருக்குமறையாகாதென்றுரைத்திடுநாட்பத்துமப்பாலியம்புவாமே. உகஉ)

மூப்பானுளவுமியாதொருகருமமவள்புரிதன் முறைமையன்று
லப்பானுற்பானுண்மட்டாகாபெண்பெறின்மூப்பானுட்குமேலே
தப்பாமற்பூப்புவரினத்தோடாசௌசமெலாந்தவிருந்தாதை
யொப்பாருமகவுதிக்கினுபியறுத்தாற்றானையொருவனன்றே (௨௧௩)

நாபியறுத்தாற்றாதைகொடுக்கலுமாகாவாங்கினவையுண்டாகு
நாபியறுத்திடுமுனமத்தாதையுநற்றானமெலாநல்கலாகும்
பாவமறுத்திடவுரியோரேற்கலுமாந்தந்தைகுழவியைப்பாங்காலே
மார்பமுறவெடுத்ததனைத்தீண்டலுமாம்பின்றீண்டல்வழக்கதன்றே (௨௧௪)

ஆசௌசம்

பெண்பிறக்கின்ஞாதிகட்காசௌசமில்லைபுதல்வன்மரித்திடிற்பிறங்கு
நண்புபெறுமேழுதலைமுறையளவாசௌசமுறுநாடின்மேலும்
பண்புடையவுறவெனவிங்கறிந்திடிற்றொண்ணூறுகன்னல்படருங்காந்தள்
கண்புகுமுன்பெண்மரிக்கின்மூன்றுதலைமுறையோர்க்காசௌசங்கண்டாம்

மாதமொருமூன்றதனிற்கருப்பநழுவிடிலவட்குமருவுநாண்மூன்
றேதமுறவதற்குமேலாறுமதியளவுமதிக்கொருநாளேற்றத்
தீதகலுமாறுமதியெனிற்சிறந்தநற்கொழுநனுதசமாடக்
கோதகலுமேழுமதிமுதல்வீழினுசௌசமுழுதுங்கூடும். (௨௧௬)

அஞ்சுமதிமுதலாகஞாதிகட்குப்புனன்மூழ்கவகலுமந்தத்
தஞ்சமுறுசெனனசௌசத்தினிடைமரணசௌசந்தான்சாரின்
வஞ்சமுறுசெனனசௌசத்தோடுநீங்கிடுமவ்வாசௌசநீங்கும்
விஞ்சலுறுநாண்மரிக்கினந்நாளோடிருதினந்தான்விலக்கநன்றே. (௨௧௭)

அச்செனனவாசௌசநீங்கும்வேளை யதனின்மரித்திடின்மூன்றுநாளைக் கூட்டி, நிச்சயமாவிலக்கிடுகவவ்வாசௌசநீங்கினபி னுடன்மரிக்கின்முழுதுங்கொள்க, வச்சமுறப்பிள்ளையைமண்புதைக்கின்ஞாதி யரும்புனன்மூழ்கிடுகவிரண்டாண்டுசென்ற, விச்சையுறுபிள்ளையைமண்புதைத்தாலன்னோர்க்காசௌசமொருநாளென்றியம்புநூலே. (௨௧௮)

மூன்றுவயதெனிற்சுடுகவதற்குமேலாறாயாண்டளவுஞாதிகட்குமூன்றுநாளுண், டாண்டேழ்சென்றிடுபுதல்வன் மரிக்கின்ஞாதியவரவர்க்குச்சொன்னவாசௌசமுண்டா, மான்றமறையோராதிநால்வருக்குமொருபதுநாளுன்கிருபதொருமுப்பானுட், டோன்றியிடுமாசௌசமுடிவென்றோதுஞ்சுருதிகலைமிருதிபுராணங்களென்றும். (௨௧௯)

மூன்றுவயதளவுசென்றபெண்மரிக்கின் முதன்மையுறுதந்தைதாயுடலினொக்கத், தோன்றினர்களிவர்களன்றிமற்றோர்ஞாதியவர்கள்புனன்மூழ்கியிடச்சுசியுண்டாகு, மான்றமகட்பேசுமுனமரித்தாளாயினவர்க்கோர்நாட், பேசினபின்மரிக்கினன்னோர், மூன்றுதினங்கொள்கவவள்கணவற்கூடிமரிக்கினந்தக்காந்தன்முதலோர்க்காசௌசம். (௨௨௦)

தந்தைமுதலானோர்தொண்ணூறுகன்ன றன்னளவும்விலக்கிடுககன்னியாயி, னெந்தவருணத்தோருமுழுதுங்கொள்க வெழிலுடையமகன்புதல்வ

ன்புதல்வியேற்க, வந்தவுடன்பிறந்தாணன்மருகனோடுமருகியொருவருக்கு
வளர்த்திடக்கொடுத்த, சிந்தையுறுபுத்திரன்புத்திரிதன்றம்பிதமையனிவ
ரோடுபினுஞ்செப்பக்கேண்மோ. (௨௨௧)

தம்பிமகடமையன்மகடாதையோடுபிறந்தாளங்கவண்மகளுமகனுஞ்சா
ற்று, நம்புசெறிசிறுதாதைபெரியதாதைமகளிவர்கண்மகனுமகளோடுநா
லேந், தம்பமுறுமகனுடையமகண்மாமன்றன் றருபுதல்வியோடுமகண்சிறிய
தாய்க்கு, மம்புவியிற்பெரியதாய்தனக்குமன்பால்வருபுதல்வர்புதல்வியர்க
ளாயுங்காலே. (௨௨௨)

ஒருவரிடத்தேகூடிப்படித்தபேர்க ளூற்றமகட்கொடுத்திடுமாமன்றன்
மைந்தன், கருதுமுபாத்தியாயரிட்டரெனுமின்னோர்க்குக் காணுமொரு
தொண்ணூறுகன்னன்மட்டுங், துரிசுறுமாசௌசமுறுந்தாதைவீட்டிற்புத
ல்விகருவுயிர்த்திட்டாற்றுடக்குநாண்மூன், றொருவல்செயதாதைக்குஞாதி
வீடேலொருபகலுற்றிடுமெவர்கட்குறுமாசௌசம். (௨௨௩)

தாயுடையதாய்க்குப்பெண்கொடுத்தமாமன்றனக்குமா மியர்தமக்கு
மாமனுக்குத், தூயகுரவனுக்கவன்றன்மனைக்கவன்றன்சுகமுடையபுத்தி
ரனுக்கொருவேதந்தான், வாயுறவேயுரைத்திடுவோன்வீட்டில்வந்துமரிக்
கினிவன்றனக்கசுசிநாண்மூன்றாகு, மாயுமறைவரரதோன்மரிக்கினோ
ர்நாளசுசியிலைமாதர்மரித்திடினெடுத்தால். (௨௨௪)

அற்பசௌசத்தினடுத்தீர்க்கசௌசம் வரினதனோடகலாதீர்க்க
சௌசத்தி, னற்பசௌசம்வரினத்தீர்க்கசௌச மகலும்போததுவுமக
ன்றிடுதலுண்மை, சொற்பரவுசெனனசௌசத்தினுப்பண்சொல்லுமரண
சௌசம்வரினத்தோடு, பொற்பாகவகலாதுமரணசௌசந்தனிற்செனன
சௌசம்வரிற்போமதோடே. (௨௨௫)

மரணசௌசமுஞ்செனனசௌசமுமிங்கொருகாலம்வரினிரண்டும்
வரமாகச்சுத்திசமமுறுமரணசௌசத்தின்முடிவுநாளிற்
றிரமாகச்செனனசௌசம்வரினுநாளிரண்டுசேர்க்கமுன்போற்
சிரமாகுமாசௌசமொழிவில்வரினெண்மூன்றுசேர்த்துக்கொள்ளே. (௨௨௬)

மகமியற்றினோர்களுக்குநிருவாணமுடையோர்க்குமரித்தகாலத்
தகணமுறுநாண்முதலாக்கொள்கவல்லார்தமக்குமரித்திடுநாட்கொள்க
வகமுடனேவெந்தோரன்னிபதேசம்போனோர்பஞ்சத்தின்மாய்ந்தோர்
பகைமையுறுசமரினிலைப்பட்டோர்தேசங்கலகப்படமாய்ந்தோர்கள்,

மிக்கதொருபெருமாரிப்பிணிமடிந்தோரிவர்களுக்குவிமலமான
தக்கபுனன்மூழ்கவுடனேசுசியாகந்தொடங்கித்தான்செய்காலும்
புக்குமகத்தாணவினைதொடுத்துமுடித்திடுகாலுமசுசிபோகுந்
தொக்கபுனன்மூழ்கவிவாகந்தொடுத்தநாணடுவின்மணவாளர்க்கும். (௨௨௭)

கன்னிகையையொருவருக்குவழங்குங்காலமுமீசன்விழவுதன்னின்
மன்னுபிரதிட்டையினின்மற்றவற்றைச்செய்வோன்செய்விப்போனோடு

துன்னுபரிசாரகர்க்குமாசௌசமுறின்மூழ்கச்சுத்தியாகு
மன்னமறுசாந்திராயணத்தொடுபராயணைத்துநடுவுமாமே (உஉகூ)

தீர்த்தயாத்திரைதனிலுஞ்சிராத்தத்துமாசௌசமூழ்கத்தீருஞ்
சீர்த்தியுறும்பிரமசரிதனக்குமுடனேமூழ்கத்திருமன்றி
வாய்த்திடுமோமம்புரியுங்காலையினும்வலியமரித்திடினுநிந்தை
யார்த்தமரணத்தினுமங்குடனேமூழ்கிடவசுசியகலுமன்றே. (உ௩௦)

நல்லொழுக்கந்தனைநீக்கித்தீயொழுக்கமொழுகினவன்மரிக்கிற்கன்ம
மொல்லையினினீச்கியேசுட்டதற்பினேகநாளுற்றகாலைத்
தொல்லையினிற்புரியுமுறைகருமமனைத்தும்புரிந்துதுறக்கநாண்மூன்
றல்லலுறுபொழுதகளிரொடுபிரதிலோமர்கட்குமசுசியென்றும் (உ௩௧)

முடிசூடுமன்னவர்க்காசௌசமுறினப்பொழுதேமூழ்கச்சுத்தி
பொடியோடுகண்டிகைபூண்டீசனடியாரெனுஞ்சூத்திரர்க்கும்போற்று
மடியாராயிச்சின்னமுடையவனுலோமருக்குமமலன்கோயிற்
படியாகக்காணநவிற்றிடுவோர்க்குநாளொருபத்தைந்திற்பாறும். (உ௩௨)

சாற்றுமுருத்திரகணிகைதனக்குமாலயபஞ்சாசாரியர்க்கு
மேற்றமுறுசிவாச்சிரமமடைந்தவர்க்குஞ்செனனமரணத்தினெய்துந்
தேற்றமுறுநாளொருபத்தைந்தளவுமாசௌசந்தேவதாசிக்
கேற்றமுறுமாலயத்திற்றிருப்பணிசெய்வோர்க்குநாளிருபதாமே. (உ௩௩)

ஆசௌசமுடையோர்களாலயத்திற்புகுங்காற்கோபுரத்துட்சென்று
தேசாருங்கொடிக்கம்பத்தெதிர்நின்றுசேவித்தல்சிறப்பதாகு
மாசாருமரணமுறினன்னியதேசத்தினின்மும்மாதத்துள்ளே
கூசாதுகேட்டிடினுண்மூன்றுகொள்சஞாதியர்களாறிற்பாதி. (உ௩௪)

ஒன்பதுதிங்கட்டுனையுங்கேட்கினொருபகலுமுமிங்கதற்குமேலே
நன்புனன்மூழ்கிடச்சுசிதாய்தந்தைமரித்திடக்கேட்கினொர்பானிற்
பின்செனுமங்காசௌசமொருவருடங்கடந்தாலும்பேணிச்செய்க
வன்புடனேயதற்கேற்றகருமமெலாம்பிதாமனைக்குநாண்மூன்றாமே. ()

அன்னியமாகியபிணத்தைத்தொடிற்சுலநானத்தையடைவிற்பண்ணி
மன்னியவாநெய்யுள்ளேகொண்டனலிற்காயவரமறையோன்றனுந்
துன்னுமரசன்வணிகன்சூத்திரனிம்மூவரிறந்திடுங்காலந்தப்
பன்னுபிணப்பின்செலினொன்றிரண்டொருமூன்றெனுநாளுமசுசிபற்றும் ()

அரசன்றன்வணிகசூத்திரப்பிணத்தின் பின்செலினங் கசுசிதானவனை யோர்நாட், பரவிடுமொன்மறைநாளும்பொருந்தும்பாரிற் பண்பொடுமில் வாழ்வானுசாரத்தோடு, பொருவறுலௌகிகமிவைகள்கடக்கலாகாபுகல்ச மயியாசௌசமுற்றுற்சந்தி, புரையறுமந்திரமதனைவிட்டுச்செய்கபூசனையி லமலனைத்தீண்டிடிற்பொல்லாதால். (உ௩௭)

உட்பூசைபுரிந்துபிறராலேபூசை யுஞற்றுவித்தஞ்சலிபுரிகபத்தி ஞானம், கட்பார்வைவராக்கியந்தானுண்டேற்பூசை [நயந்துசெய்கவக்காலத்தசுசிநீங்

கும், விட்டேகாதடைந்திடுமௌசௌசாந்தத்தின் விளம்புநந்தபோசனஞ்செய்தகோரந்தன்னைப், பெட்பாகவாயிரநம்மையுரைத்தேயோம பயிடேகஞ்செய்கசுசிபிறக்குந்தானே. (உகஅ)

பந்தமனைத்தையுந்துறந்துலோகந்தன்னிற் பயில்விவகாரமுந்துறந்தவிரத்தற்காசௌ, சந்தவனன்றனைக்காணுமிருள்மேடாலின் முந் தகுநிருவாணத்தையுடையோர்க்குஞ்சாற்று, முந்துபிருதக்காலசுயம்பாகர்க்குமுற்றுறுகற்கிரியையினன்ஞானத்தாலும், வந்துறுமாசௌசமொருசணத்தினின்று மாறுமவர்புனன்மூழ்கமரபினாலே. (உகசு)

தீக்கையுடையோரவருட்சிவனீங்குந்திருமேனிதீண்டிடினல்லசெலத்தின்மூழ்கி, வாக்கினகோரத்தையிருநூறுசொல்கவரமூறுமந்திரியேட்டிபணிர்குரவனுங்கு, நோக்கியுரைத்திடுசதீக்கிதரினுனவருணத்தினுயிர்நீத்தோர்பின்னுயர்ந்தோர், பேயக்குறுகல்குறுகிடினீர்மூழ்கித்தங்கினீசமொருநூறுசொல்லப்புனிதமாமே. (உசo)

சேட்டர்கனிட்டர்கன்மரிக்கினித்தியத்தைச் செய்துகாமியமூன்றுநாளைநீக்கச், கோட்டமறுஞ்சிவனடியாரெனினோர்நாளைக் கொள்ளாதுவிடுகசய நோய்வகுரி, வாட்டமுறகுட்டமொடுபெருவியாதி யினையின்மரித்திடிற்றருப்பையுடற்சுட்டக்காற், கூட்டுபுனன்மூழ்கிடுகவசுசியேழுமேனபகாரகண்மூறையுறவேகூறுமன்றே. உசக)

துறவிபொருள்வைத்திடினுசான்றனக்குச் சோர்வறவேகொள்ளன்முறையவனில்லானே, லறிவுறசேட்டர்கள்கனிட்டர்தமக்காமில்லை யவர்களெனிலிறந்தோன்சுற்றத்தார்கொள்க, செறிவுறுமங்கவருமிலரெனிலீசற்குச்சிவனடியார்தமக்குமடாலயத்திற்கன்றிப், பொறியுறுநற்பெரியோர்க்குச்சிவாக்கினிக்குப்புரையறவீந்திடனீதிபொருந்துமன்றே. (உசஉ)

மானுடர்தம்பசையுறுமென்பதனைத்தீண்டின் வளமுறுதண்புனலாடியகோரநூறு, தானுரைசெய்திடுகவுலர்ந்ததனைத்தீண்டிற்றண்புனன்மூழ்கிடுகவன்றியாசமித்துப், பானுவைநோக்கிடுகபிணந்தொட்டோன்றன்னைப் பரசமயிகளைச்சூதகிதன்னைத்தீண்டி, னுணதொருசசேலநானத்தைப்பண்ணியகோரமொருநூறுசொலவகனுமன்றே. (உசங)

அந்தணன்சூத்திரர்தீண்டிற்சசேலநானம்பண்ணிடுகவந்தராளரைத்தொட்டானேற், புந்தியுறநானமிரண்டியுனைஞ்செய்கபுகலுமறுவிதமானகருமகாரர், வந்திடினோர்நுகக்கிடைக்குண்மூழ்கநீங்கும் வண்ணார்சண்டாளர்தமபாண்டமாயின், மூந்துமிருவிர்கிடைக்குண்மூழ்கநீங் குமப்பாற்றீட்டில்லையென்னமொழியுமாதோ (உசச)

நாய்கழுதைகொடிகழுகுநரிகோழிபன்றிநின்மாலியத்தையுண்டோன்
பேயுறுமீமந்தன்னிலுள்ளவைகள்பிணக்கந்தம்பதிதனிசன்
வாயசநாயக்கவேனுபிதன்வேடனுனன்கோட்டானிவற்றைப்
பேயுறத்தீண்டினனுயிற்பண்ணிடுகசசேலமெனும்புனிதநானம். (உசரு)

மலநீர்சுக்கிலநாபிதனக்குமேற்படின்மூழ்கவரங்கையன்றி
நலமாருநாபிக்கீழ்ப்படினெழுகாண்மண்பூசிநல்லநீராற்
பலகாலுங்கழுவிடுகவங்காபிதனக்குமேற்படுபதார்த்தந்
தலையானசுசியாகுமதன்கீழ்ப்பட்டிடினசுசியாருமன்றே. (௨௪௬)

நாயினதுவிட்டைகாகத்தினதுச்சிட்டநாபிக்குமேலே
போயுறப்பட்டிடின்மூழ்கிப்புகல்சகாயத்திரிநூறடனெட்டெண்ணி
யாயுமதன்கீழ்ப்படின்மண்ணாலநலாற்கழுவிடநன்றாகுஞ்செய்ய
தூயமுகந்தனின்மலநீர்சுக்கிலம்பட்டாலுங்கோமயத்தைப்பூசி. (௨௪௭)

தண்புனலின்மூழ்கியைந்துகவ்வியமுங்கொள்கபகரன்னினனம்
பண்புடனேடுசகிசிதனிலாகாசிரகணைமேற்பண்ணனன்றாம்
வெண்பொடியின்மூழ்கிடுகவிரத்தர்கிருகத்தார்மந்திரநானத்தை
நண்புறமூழ்கிடவரமுற்றிடுமெனவேதாகமங்கணவிலுமன்றே. (௨௪௮)

ஈசனைச்சேவித்திடவேகும்பொழுதுமியாகத்துமணத்துமென்னுந்
தேசகலகத்தினும்பட்டிணமூர்வேமிடத்தினுந்தீர்த்தத்தும்வெட்டும்
பூசலிடத்தும்பகவன்விழவிடத்தும்வழிபோகுமிடத்துந்தொட்டா [றும்
லாசறுதீட்டிலையெனநூன்மொழியுமிந்தவிடங்களிலேயடைந்தோர்க்கென்

கடிமணத்துமதுபருக்கஞ்சோமபானந்தாம்பூலங்காய்மேலாம்
படியுறுநற்பதார்த்தங்களுந்துங்காலுச்சிட்டமாகாபாங்காற்
படுவுறப்பேசுங்கால்வாய்த்திவலைபடினுசமனம்பண்ணினுள்ளே
பொடியுறுநற்பிராணாகுதிக்காகுதியினுச்சிட்டமாகாதென்றும். (௨௫௦)

தண்புனன்மூழ்கிடிற்பநகிற்றும்மிள்வெளியேபோய்த்தான்மீளிற்சாரு
மூண்டியினிற்சொட்டாவிலிடினுச்சிட்டத்தாரோடுரைக்கினுற்று
மண்டலநாயகனுணசேவனாராதலையின்மலநீக்குங்காற்
கண்டிடினுமாசமனம்புரிந்திடுதன்மரவெனநூல்கழறுமன்றே. (௨௫௧)

திரவியசுத்தி

கனகமிரசதமசுசிபட்டிடிற்கோமயமதனைப்பூசிக்காய்ந்த
புனலதனாற்கழுவிடுகசுத்தியுறுமிரும்பாயினுரைத்துப்பொங்கு
மனலதனிற்காய்ச்சவரமழகுறுசெம்பெனிற்புளியாலசுசிநீங்கு
மனமுறுவெண்கலமெனில்வெண்பொடியிடுகசுசியெனநூன்மதிக்குமன்றே

மற்றுமுளதாதுவுக்குவெண்பொடியும்புளியுமிடவரமாமூங்கி
லுற்றிடுபாத்திரத்தொடத்திப்பாத்திரமாயிடிற்பசுவாலுதகத்தாலே
பெற்றிடுநற்சுத்திமண்பாண்டத்தினுச்சிட்டாதியுறிற்கழிக்கபின்னுஞ்
சொற்றனமுத்தொடுசங்குமிப்பியும்வெண்டயிரதனாற்சுசியுண்டாமே. ()

அன்றியவைகோதுமையினுமியாலுநெல்லுமியினாலுநீங்கு
மொன்றியவெண்புடைவையெனிலுவர்மண்ணாற்காரத்தாலுறுமேசுத்தி
துன்றியதோலிலைகயிறுபுரோக்கணத்திற்சுசிதண்ணீர்பட்டபாண்டங்
கன்றியவெங்கனலதனிற்காய்ச்சிடுககற்கழுவச்சுத்தியாமே. (௨௫௪)

மூங்கிற்பாத்திரங்கண்மலமூத்திரம்பட்டிடின்விடுத்தன்முறைமையாகும்
பாங்குபெறுசர்வதாதுக்களினுள்ளவைகளனைம்படவேசுத்தி
தீங்குறுகேடம்பூனைபெருச்சாளிதானுவிற்செய்பாத்திரத்தை
யாங்குறவந்தணைந்தநக்கினைத்திரத்தேழ்முறைகழுவியனலிற்காய்ச்சே ()

ஒட்டகநாய்கழுதைகோவேறுநரமுரைத்திடுமிட்பாத்திரத்தைக்
கிட்டிமுகர்ந்திடினவற்றைநக்கியிடின்விடுதிடுசகிரிநக்கின்
விட்டெரியுமனலதனிற்காய்ச்சிடுகவகப்பையுமப்பாண்டப்போல
முட்டறவேகொண்டிடுகசுசந்தமுறிற்றூர்க்கந்தமுற்றுநீங்கும். (௨௫௬)

சத்தியத்தார்சுசிவசக்குக்கோடிடலார்சுசிநசிக்குமனத்திற்சால
வுய்த்திடுதீங்குறின்மாதர்க்கவர்பூப்பினைகளுமலர்பிறர்தோள்சேர்த
மத்தமுறுதீங்ககலாபழங்கழுவச்சுசிதயிர்க்குப்பார்க்கச்சுத்தி
புத்தமுதமாகியவெண்ணெய்க்குருக்கப்பால்காய்ச்சப்பொருந்துஞ்சுத்தி. ()

உப்பெனிற்றண்புனலைவிட்டுக்காய்ச்சிடுகசுத்தியுறுமிவைகள்செய்யத்
தப்புறினுங்குருமொழியசற்றோட்டமுறுநீதியன்றித்தனங்கள்சேரிற்
செப்பமுறவிரந்தோர்க்குக்கொடுக்கவரமங்காடிசேர்ந்தபண்டந்
தப்புறுவண்ணூன்கொடுவந்திடுப்டைவைசுசியெனநூல்சாற்றுமன்றே. ()

செங்கதிர்வெண்மதிக்கிரணம்வளியிவையால்வழிவருநற்றிரவியங்க
டங்கியுறுஞ்சுத்திகிலர்தனிற்செலமோர்பசுக்குடிக்குமளவேற்சுத்தி
பங்கமுறுமலமூவர்நீர்நெல்லிடத்திற்படிற்கழுவப்பலிக்குஞ்சுத்தி
தங்குமரிசியிற்படினும்பட்டவிடமெடுத்திடவேசாருஞ்சுத்தி. (௨௫௯)

வெண்கலப்பாத்திரமதனைக்குதிரைபசுநக்கிடின்வெள்ளாட்டுமிச்சில்
பண்படவேபடிற்காய்ச்சிப்பத்துமுறைவெள்ளையிடப்பாங்குசேரு
மொண்பவளமணிகழுவச்சுசிகொம்பாலென்பாற்செய்தலற்றுக்கெல்லாம்
வெண்கடுகுபடச்சுசியம்பளமொடுபட்டாடைவெயிலொடுநீர்தூவின். (௨௬0

தண்புனலாற்புரோக்கணத்தாற்சந்திரகாவிக்குறுமச்சுசிதான்சாரு
மொண்புவியிற்றிருவலமிட்டாற்றெளிக்கவுறுஞ்சுத்திமரங்களுக்குப்
பண்புடனேபுரோக்கிக்கச்சுசிதூண்மேற்புனலொடுமண்பூசிமண்ண
வெண்பெறுநற்சுத்தியுறுமெண்ணெய்தயிர்மோர்நெய்பாற்றென்களாயின். ()

அன்னியபாண்டத்திருந்தவாயினுமங்கவைபுனிதபாண்டந்தன்னிற்
பின்னுமுறையிலில்வார்த்துக்கொண்டிடுகபேசிடுநெய்யெண்ணெய்தன்னி
லன்னியவுச்சிட்டஞ்சேர்ந்திடிற்புனல்விட்டேகலக்கியெடுக்கநன்று
மன்னியபூமிகடமக்குச்சுசியறிந்தபடியினியாம்வகுத்துச்சொல்வாம் ()

செனனமுறுபூமிபிணம்புதைத்தவிடங்கல்லியெடுத்திடச்சிறக்கும்
புனிதமறுசண்டாளபூமியைச்சுட்டிடலேபுனிதமாகு
நனியுயருமொட்டகமூர்ப்பன்றிநாய்கழுதையிவைவசித்தபூமி
கணமழைபெய்தோடவரமலபூமிமெழுகலாங்காணுமன்றே (௨௬௩)

வேறு

கல்விமண்ணெடுத்திடப்பசுவடைத்திடக்காலஞ்
செல்லவன்றியுந்திருமெழுக்கிடவலாற்செதுக்க
நல்லமண்கொடுநிரைத்திடச்சுடச்சுசிநணுகு
மல்லல்சேர்புவிக்கெனமறையுரைத்திடும்வழக்கால் (உகூச)

வேறு.

தெளிக்குங்காற்செலவிற்றோர்மாட்டின்வாற்பிரமாணஞ்சேரிற்சுத்தி
குளிக்கும்வாவிகள்கூபதடாகங்கணுய்கழுதைமலங்கள்கூடி
ஞெளிக்குந்தூடணநூறுகுடமெடுத்துக்கெவ்வியத்தையொழுக்கலாலே
யளிக்குஞ்சீநடையவெந்தசலமாயிற்றோடமுறாதறிகவென்றும் (உகூரு)

ஆவினுக்குப்பின்புறநற்சுசியாட்டுமுகஞ்சுசிமுன்பின்னுமாயின்
மேவியுறுமவற்றசுசிமதசரிக்குப்பிடர்சுசியாய்மேவுமிக்க
தாவுபரிக்குடன்முழுதுஞ்சுசிகுதிரையானைதேர்பசுக்கள்செல்ல
மேவிடுதூடணியத்தூள்சுசியெனவேதாகமங்கள்விளம்புமன்றே (உகூசு)

நாய்கழுதையூர்ப்பன்றியாடுநடந்திடும்பிடக்குத்தூளடைத்து
டுயவெண்ணலைறந்திடுநூன்மாதாநுசரித்திடுநற்பதார்த்தந்தம்மைச்
சேய்தொடிற்றோடம்பொருந்தாவீடசைந்தமைப்போலவசுத்தஞ்சேர்ந்த
பாவிலந்தனின்மாத்திற்பூவிலேகாய்க்கெந்நாளும்பழுதுண்டாகா (உகூஎ)

உட்டரித்தசெட்டியன்றிப்புறத்துடுத்தவேட்டியுட்டிணீடந்தோலிற்
கட்டுசெருப்பிலைசுசியீவாய்த்திவலைக்கசுசியுறுகுதிரையான்விண்
விட்டுவிளங்கிடுவெயில்பூமித்தூடண்புனலனல்கால்விரையச்சேர்ந்து
தொட்டபரிசங்கள்சுசியெனவேதாகமமுணர்ந்தோர்சொல்வர்தாமே

விரதவிதி

சுக்கிலபக்கத்தினக்கைக்கோர்பிடிபின்பொவ்வொர்பிடிதொடர்பாலேற்றித்
தக்கதினமோர்பதினைந்தனமுறைகொண்டப்பாற்பிற்பக்கந்தன்னிற்
றுக்கமுறவொவ்வொன்றாக்குறைத்திடுதல்சொல்லுமுப்பானாளந்தான்
செப்பமுறுசாந்திராயணமாகுஞ்செலந்தனக்குமிதுவேயாகும் (உகூக)

முத்தினமோர்பொழுதருந்திமூன்றுதினமயாசகமாய்மூன்றுநாளி
னைந்தனெனும்பொழுதருந்திமுத்தினம்வாயுவையருந்தநன்மையாக
வைத்திடுநற்பிராசாபத்தியமெனநூல்வகுத்துரைக்குமரபினாலே
தத்தகிருச்சிரமறிந்தபடியுரைப்பமாகமத்திற்சாற்றுமாறே (உஎ0)

மூன்றுதினம்வெந்நீர்கொண்டிடக்காய்ந்தபான்மூன்றுநாட்குக்கொள்ள
மூன்றுதினமுருக்கினநெய்கொண்டபினுண்மூன்றுபவாசத்தைச்செய்த
லொன்றுதப்தகிருச்சிரமுக்காலுழக்குப்பானொன்றினுக்காய்ச்சோரா
தேன்றவிருபத்தொருநாளருந்திடுதலதிகிருச்சிரமென்றெண்ணே உஎக)
பன்னிருநாளுபவாசமாயிருத்தல்பராககிருச்சிரமதாகு
முன்னொருபத்தைந்துதினங்கரும்பருந்தியெட்டுநிசிமுறையானெய்சொண்
டின்னுமயாசகமாகவிருந்தாறுநிசியொருமூன்றிரவுதண்ணீர்
தன்னையயின்றேயொருநாளுபவாசமுறலுதககிருச்சிரந்தான் உஎஉ)

ஒன்றுமுதலாறுதினமளவாகக்கோசலகோமயம்பானெய்யுந்
தின்றுதயிருந்தருப்பைசேர்புனலுமோவ்வொருநாட்பருகறூய
நன்றியுடையோர்புரியுஞ்சார்தபனகிருச்சிரங்கோசலந்தானுதி
யொன்றுகொளன்மும்மூன்றுதினம்பசித்துமகாசாந்தபனமென்றே ( )

நாலுதினமுதித்தறுநாழிகையினனவுகொண்டப்பாலுநாளிற்
காலமறிந்தேசாயங்காலமனங்கொண்டுதிரிகாலந்தன்னிற்
சீலமுறுபுனலாடிச்செய்தல்சிசுசாந்திராயணமோர்மாதஞ்
சாலியனப்பிடியிருநான்கோவ்வொருநாட்குணலதிசாந்திராயணந்தான் ( )

மூன்றுதினங்காலையினிலனமருந்தியசாதமாயிரமுரைத்து
மூன்றுதினஞ்சாயங்காலத்தருந்திக்கவசமுமவ்வளவுமுன்னி
மூன்றுதினமயாசகமாயிருந்திசமவ்வளவுமுடித்துப்பின்னு
மூன்றுதினம்பசித்துநாமுரைத்திடுதல்பிராசாபத்தியபேதந்தான் (௨௭௫)

சொல்லிடுநல்லநமவர்நின்மேலாயசெவ்வியநர்புனிதந்தூய
நல்லவுலகொருமூன்றதமக்குநவையற்றிடுதேவதைகளாலே
புல்லியதிட்டித்திடத்தான்படுவதன்றிப்பாலமேலாய்போச்சுநம்மாற்
சொல்லமுடியாததன்றன்பெருமையதுகூட்டுமுறைசிறிதுசொல்வாம்

கோசலத்திலேவருணன்கோமயத்திலக்கினிவெண்டயிரில்வாயுத்
தூயபயமதனின்மதிசூரியனெய்தனிற்பசுவினிறங்கள்சொல்லிற்
சேயனகப்பாற்குநீலநெய்க்குத்தயிரினுக்குக்கருமைவெள்ளை
யாயமயந்தனக்குறுகோசலத்தினுக்குச்செம்புநிறமாகுமன்றே. (௨௭௭)

கெவ்வியவிதி. வேறு

அடுக்கவீன்றவான்மலந்தின்றுன்மூத்தவான்பிணியான்
குடிக்குநல்லகன்றிழந்தவான்மலடுருன்குழக்கன்
றடுக்கவீனுருவான்சினையானிவையசற்றி
விடுக்ககெவ்வியந்தனக்குநல்லாணினைவிழைந்தே. (௨௭௮)

வேறு

பாலுமைந்துபலந்தயிர்முப்பலங்
கோலுநெய்யுங்குறித்தவிருபலஞ்
சாலுங்கோசலமோர்பலந்தான்மயந்
தூலவங்குட்டப்பாதிதுலையதே. (௨௭௯)

வேறு

மங்கலமாகியநிலத்துநெற்பரப்பிமற்றதனிற்றண்டிலத்நாலிரேகையாகத்
தங்குநவகோட்டத்தையாக்கிநாப்பண் சார்சிவதத்துவகோட்டந்தனையப்
பேராற், செங்கைகொடுநமோந்தமாவருச்சித்தோர்காத்சிரந்திடுசுட்பிரதி
ட்டாபாத்திரத்தை, யங்கதனில்வைத்தப்பாத்திரத்தின்பேராலருச்சித்தோ
ர்முறைபால்வார்த்தறைகவீசம். (௨௮0)

கிழக்கதனிற்சதாசிவதத்துவகோட்டத்தைக்கிளர்வுறப்பூசனையோர்காற்செய்துகேடில், விழுப்பமுறுசாந்தபாத்திரத்தைவைத்தப்பெயர்தன்னாலருச்சனையைவிழைந்தேயோர்கால், விழுக்கமறுதயிரதனினிறையப்பூரித்திருகாற்றற்புருடத்தான்மருவிப்பூசித், தழுக்கரத்தென்றிசையில்வித்தியாகோட்டத்தினைப்பெயரானமவெனவோர்முறையர்ச்சித்தே. (௨௮௧)

அக்கோட்டந்தனிற்றேசோரூபபாத்திரந்தனைவைத்தப்பெயராலருச்சித்தாவெனய், மிக்காரவதனிடத்துவிட்டுமுக்கால்வெகுரூபத்தாலபிமந்திரித்துட்பின்னுந், தக்கோர்கள்வடதிசையிற் பூசைசெய்துதகுபுருடதத்துவகோட்டப்பேர்தன்னாற், புக்காரவதனினிரத்தினேதகப்பேர்பொருந்தியிடுபாத்திரத்தைப்பூசைசெய்தே. (௨௮௨)

கோசலம்பூரித்ததற்பின்வாமந்தன்னைக்குறித்துரைத்துநான்குதரம்பூசைபண்ணிக், காசறுமேற்றிசையதனிற்பொருந்துகாலதத்துவகோட்டத்தையுறக்கருதிப்பூசித், தாசகலவமிர்தாத்மபாத்திரத்தையதனில்வைததப்பெயராலோர்காலர்ச்சித்துத், தேசுறுகோமயமதனைப்பூரித்தைங்காற்சிறந்திடுநல்லசாதத்தாற்பூசைசெய்தே. (௨௮௩)

ஈசானகோணமதனிடத்தேமிக்கபிரகிருதிகோட்டமதையினிதர்ச்சித்தே தேசாருமவ்வியத்தபாத்திரத்தைச் சிறப்புறவேயங்கதனிற்றிருந்தவைத்துக், கூசாதப்பெயராலோர்முறையர்ச்சித்தேகுசைநீரையதனினிறைந்திடப்பூரித்தே, மாசானதறமூலமொருபதோடேயாறுதரங்கூட்டியருச்சித்தபின்னர். (௨௮௪)

வேறு.

மயமாதிவிபரீதமுறவொன்றொடொன்றேலைகயாகவே
நயமாகமுறையோடுகலவாவொரைந்தாறினவைதிரவே
சயமாகவுறுபூசைபுரிதந்தவானைந்துதரைமீதிலே
யுயர்வாகமிகுபாவமவைசிந்துமதுகொள்ளவுணர்வாருமே. (௨௮௫)

வேறு.

விதியுறுபரிகாரத்தில்விளம்பிநூற்றெட்டுமூலஞ்
சதிருறவருச்சித்தக்கெவ்வியத்தினைத்தரித்துக்கொள்ளிற்
கதிரவன்முன்னிலந்தகாரமுங்கனலிற்சேர்ந்த
பொதியுறுபஞ்சும்போலப்பாவநாசம்பொருந்தும். (௨௮௬)

வேறு.

இம்முறையிற்கூட்டுறுசெவ்வியந்தனக்குச்சிவகூர்ச்சமென்றுபேராஞ்
செம்மையறுமாபாதகத்தினெண்ணாயிரமூலஞ்செபித்துக்கொள்ளப்
பொய்ம்மையுறுபாவமறும்புத்தியொடுஞ்செயினிரண்டுகுணிதஞ்செப்பின்
மெய்ம்மையெனும்பாவமகன்றேடுமெனவாகமநூல்விளம்புமன்றே ( )

உச்சரிக்கின்விதிப்படியேபிராசாதமோராறுமாதந்தன்னி
னிச்சயமாவிட்டசித்தியடைவர்போங்கால்வருங்காணியதமாக

வுச்சரிக்கிற்கூறுபபாதகங்களெல்லாநாசமுறுமதனிடத்தே
வைச்சிலயம்பணின்மனத்தைதத்தற்சொருபமுறுவரிதுவாய்மையாமே. ()

இக்கலியிலகோரவனுசித்தியுறமதுபோலயாதொன்றுஞ்
தக்கதொருசித்தியினைத்தான்வழங்காதாமதர்க்குச்சமமுமில்லை
மிக்கதொருபோக்குவரத்தருந்துங்காற்றுயிலுங்கால்விழிக்குங்காலும்
புக்குறவங்கதனைமனத்திடைநினைக்கப்புத்தியொடுமுத்திசேரும். (உஅ௯)

ஒருகாலங்கதனைநினைத்திடிற்சருவபாவமெலாமோடுமென்றி
யிருகான்முக்காணினைக்கிறதீர்த்தமெலாமாடுபலமியல்பிற்சேர்வர்
திருவாரும்வேள்வியனைத்தினையுமுடித்திடுபலமுஞ்சேர்வரன்றே
மருவாருமிதழிமணிமுடியமலன்வெகுரூபமகிமைதானே. (உ௯௦)

வேறு.

நீலநிறத்தினராய்மேசமுழக்கெனவேநீடுமுரப்பினராகியே
சாலமிருத்திடுமாபாவமறுப்பவர்நீழ்தாடிதரித்திடுதீதீர
கோலமுகத்தினின்மேல்வாளெயிறுற்றிடவேகோதறுவட்டமதாகவோர்
பாலமுறக்கமதோடேஆறுமுக்கணுமாபாவகனிற்சடைதானுமே. (உ௯௧)

வேறு

நீடுவரதத்தோடாகுமபயத்தாய்நேரறுமணிப்பூணோ
டாடையணிவுற்றேநாடுமழகுற்றேயாகமதின்முப்பூணூ
லோடிதழிநற்றார்வாள்விடவரைக்கேயோதறுபுலித்தோன்மே
லாடரவசைத்தேபாவமதொழித்தாளாதியென்மனத்தானே. (உ௯௨)

வேறு

அஞ்சக்கரமாரரியாரறியா
ரஞ்சக்கரமாரரியாரறியா
ரஞ்சக்கரமார்புவிமீதமர
ரஞ்சக்கரமீதமராவணிவார். (உ௯௩)

வேறு.

தானைபாரிடமாதிரமாக்கினர்
தானைபாரிடமாதிரமாக்கின
ரானையூருமரவச்சிலம்பரே
யானையூருமரவச்சிலம்பரே. (உ௯௪)

வேறு.

கஞ்சனையுந்திப்படவருளிக்கார்விடநேருங்
கஞ்சனையுந்திப்படவருள்கமலக்கண்ணனு
மஞ்சனசந்தத்திந்திரன்முனிவோர்மலரானு
மஞ்சனசந்தத்தின்பொடுடணியும்மதிசூடி. (உ௯௫)

வேறு

மலையமுனியைவிரும்பினனேமலவிருணந்தவிரும்பினனே
யிலயமனத்தினுவந்தனனேயெண்குணமாயமிருந்தனனே
கலையையுறுமதிதங்கினனேகருதுமவர்மனத்தங்கினனே
மலையவருபுரமீற்றினனேமதனையுடைதிருநீற்றினனே. (௨௯௬)

துங்கமுறுபொங்குதீயத்தரேசோதிவிழிமேவுபாலத்தரே
மங்கையுமைதங்குமாகத்தரேவானனிலமாதிமாகத்தரே
சங்கமுறுகூடல்வாழ்சித்தரேதாரவடிவானவர்சித்தரே
தங்கமுறுகாதில்வாணத்தரேசாரவடிதேடுபோணத்தரே. (௨௯௭)

வேறு.

பவளப்பொருப்பைநிகர்மேனியனப்பொருப்பிற்
றவளப்பொடியப்பெனலாகும்வெண்ணீறுதாங்குங்
குவளைக்கணிபங்கினன்றேவர்குழாங்கைகூப்பித்
துவளக்கனிவாய்திறந்தாழ்கடனஞ்சுதுய்த்தோன். (௨௯௮)

இத்தேவர்தேவனெமக்கேயிறையேனைத்தேவர்
பொய்த்தேவரென்றேகருதிப்புரிபாவமெல்லாங்
கைத்தாள்பரமசிவகாமதகனவென்றுள்
வைத்தேயுரைக்கவினையாவையுமாறுமன்றே. (௨௯௯)

வேறு.

மங்கலமாகியபொருணைமருப்பகல்சந்தனமேந்திவழங்குதீர
மங்கமலாசனமகலாக்கமலைவாணியாதரிக்கும்வேளைநகர்மீதினன்பு
தங்கிடுமாதவர்மலையமுனிக்கொப்பானதன்மையர்நித்தியகருமந்தவறாச்சீல
துங்கமுருகமத்தினுறுபரிகாரத்தைச்சொல்லுகநீயெனத்தமிழிற்சுருக்கியா
[ய்ந்தே
அன்னவர்தந்திருவாக்கென்றலைமேற்கொண்டாண் டானசொல்லமெண்
ணூற்றெட்டாண்டாங்கீர, வென்னுமுறுவருடமுத்தராயணத்திலெழிலுறு
கும்பத்தில்வளர்பக்கந்தன்னிற், பன்னுபுதவாரமகம்பருவந்தன்னிற்பதி
ஞானப்பிரகாசன்பாதந்தன்னை, யுன்னியுளத்தறிந்தபடியுரைத்தேன்கல்
வியுடையோர்கள்பொறுப்பரெனுமுறுதியாலே. (௩௦௧)

அந்தணர்வாழியநீதியரசர்வாழ்கவானினம்வாழ்ந்திடுகமழைபொழிகமே
லா, மெந்தையருள்வேதமொடாகமமிக்கோங்கியெங்குநிறைவெய்துகவே
ள்விகடழைக்க, பந்தமிலாவரன்பூசையவன்றன்கோயிற்பணிதருமநெறியா
வும்படர்கபாரிற், றந்தியுரிபோர்த்தான்றன் னடியார்வாழ்கசைவநெறிநா
டோறுந்தழைகதானே. (௩௦௨)

பிராயச்சித்த சமுச்சயம்
முற்றுப் பெற்றது.
திருச்சிற்றம்பலம்.